Test code - 09

# 080/DD/18

| Register Number | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|

## DEPARTMENTAL EXAMINATIONS

## DEPARTMENTAL TEST IN THE TAMILNADU SERVICES MANUAL VOLUME – I FOR THE STAFF OF THE TAMILNADU PUBLIC SERVICE COMMISSION

(Without Books)

Maximum Time : 2.30 hours                                   Maximum Marks : 100

## ***IMPORTANT INSTRUCTIONS***

## OBJECTIVE TYPE

கொள்குறி வகை வினாத்தாள்

**Read the following instructions carefully before beginning to answer the questions.**

வினாக்களுக்கு விடையளிக்க தொடங்கும் முன்பு கீழ்க்கண்ட அறிவுரைகளை கவனமாக படிக்கவும்.

**NB : Words of masculine gender in these instructions shall, where the context so require, be taken to include feminine gender.**

இந்த அறிவுறுத்தலில் ஆண் பாலினரின் வார்த்தைகளில், சூழலுக்கேற்ப தேவைப்படின் பெண் பாலினரின் வார்த்தைகளும் அடங்கும்.

**This booklet should not be opened till the Invigilator gives a signal to open it. As soon as the signal is received you should open the booklet and then proceed to answer the questions.**

இந்த வினாத்தொகுப்பினை கண்காணிப்பாளரின் அனுமதி பெறுவதற்கு முன்னர் திறக்ககூடாது. கண்காணிப்பாளர் வினாத்தொகுப்பினை திறப்பதற்கு அனுமதி அளித்தவுடன் வினாத்தொகுப்பினை திறந்து விடையளிக்க தொடங்கலாம்.

1. This question booklet contains 100 number of objective type questions. Prior to attempting to answer, the candidate is requested to check whether all questions are there and ensure that there are no blank pages in the question booklet. In case, if any defect is noticed in the question paper, it shall be reported to the Invigilator immediately, **within first 10 minutes** after which no request will be entertained.

   இவ்வினாத்தாள் 100 கொள்குறி வகை வினாக்களை கொண்டது. விண்ணப்பதாரர்கள் விடையளிக்க தொடங்கும் முன், வினாத்தாளில் எல்லா வினாக்களும் இடம் பெற்றுள்ளனவா என்பதையும், ஏதேனும் சில பக்கங்கள் / வினாக்கள் அச்சிடப்படாமல் விடுபட்டுள்ளனவா என்பதையும் சரிபார்த்துக் கொள்ளவும். வினாத்தாளில் ஏதேனும் குறை இருப்பின் வினாத்தாளைப் பெற்ற பின் பத்து நிமிடங்களுக்குள் அறை கண்காணிப்பாளரிடம் தெரிவிக்க வேண்டும். அதற்கு பிறகு தெரிவிக்கப்படும் கோரிக்கைகள் ஏதும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

2. Answers all questions. All questions carry equal marks.

   அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும். அனைத்து வினாக்களும் சமமான மதிப்பெண்கள் கொண்டவை.

[Turn over

3. Candidate must write his Register Number in the space provided on the top right side of this booklet alone. Do not write anything else on the Question Booklet.
விண்ணப்பதாரரின் பதிவெண்ணை இவ்வினாத்தாளின் மேல் வலது பக்கத்தில் அதற்கென ஒதுக்கப்பட்டுள்ள இடத்தில் எழுத வேண்டும். வினாத்தாளில் வேறு எதையும் எழுதக் கூடாது.

4. The sheet before the last page of the question booklet shall be used for any rough work.
வினாத்தாளின் கடைசி பக்கத்திற்கு முன் பக்கத்தில் rough work எழுதி பார்க்க உபயோகித்துக் கொள்ளவும்.

5. (a) Each question comprises of four responses i.e. (A), (B), (C) and (D). Candidate shall select only one correct response. In case, if the candidate feels that there are more than one correct response, **shade the response which he considers is the best**.

(b) In any case, a candidate shall choose only one response for each question.

(c) **If more than one answer is shaded for a question, the answer will be treated as wrong and no mark will be given for that question.**

(d) The total marks will depend on the total number of correct responses marked in the OMR answer sheet. (For this purpose, only one shaded circle for a question will be taken into account for awarding mark)

(a) ஒவ்வொரு வினாவிற்கும் (A), (B), (C), (D) என நான்கு விடைகள் கொடுக்கப்பட்டுள்ளது. விண்ணப்பதாரர் அவற்றில் ஏதேனும் ஒரு சரியான விடையைத் தேர்வு செய்ய வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட சரியான விடைகள் ஒரு வினாவிற்கு இருப்பதாக கருதினால், **அவற்றில் எவ்விடை மிகச் சரியானது என கருதுகிறீர்களோ, அவ்விடையை நிழலிட்டு காட்ட வேண்டும்.**

(b) எவ்வாறிருப்பினும், ஒரு வினாவிற்கு ஒரே ஒரு விடையைத் தான் தேர்ந்தெடுக்க வேண்டும்.

(c) **ஒரு வினாவிற்கு ஒன்றுக்கு மேற்பட்ட வட்டங்களில் விடையளிக்கப்பட்டிருந்தால் அவ்விடை தவறானதாக கருதப்பட்டு, அவ்வினாவிற்கு மதிப்பெண் வழங்கப்படமாட்டாது.**

(d) OMR விடைத் தாளில் குறிக்கப்பட்ட சரியான விடைகளைப் பொறுத்து, மொத்த மதிப்பெண்கள் வழங்கப்படும் (ஒரு வினாவிற்கு ஒரு வட்டத்தில் (குறிப்பிட்ட) நிழலிட்ட விடை மட்டுமே மதிப்பெண் வழங்க கணக்கில் எடுத்துக் கொள்ளப்படும்).

6. Do not mark the answers in the Question Booklet.
வினாத்தாளில் விடைகளைக் குறிப்பிடக் கூடாது.

7. Candidate shall not remove or tear off any sheet from this question booklet. During the examination he is not allowed to take the question booklet out of the examination hall. Only after the examination is over, he shall be allowed to take the question booklet.
விண்ணப்பதாரர், வினாத்தாளின் எந்த ஒரு பக்கத்தையும், நீக்கவோ அல்லது கிழிக்கவோ கூடாது. தேர்வு நடைபெறும் போது, வினாத்தாளை தேர்வு கூடத்தைவிட்டு வெளியே எடுத்து செல்ல அனுமதி கிடையாது. தேர்வு முடிந்த பின்னரே வினாத்தாளை எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படுவர்.

8. Failure to comply with any of the above instructions will render you liable to such action or penalty as the Commission may decide.
மேற்கண்ட அறிவுரைகளில் ஏதேனும் மீறப்படுமேயானால் தேர்வாணையம் எடுக்கும் தண்டனை / நடவடிக்கைக்கு உள்ளாக நேரிடும்.

9. In case of doubt, English version is the final.
வினாக்களில் சந்தேகமிருப்பின், ஆங்கில வடிவில் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களே இறுதியானது.

1. An act which regulate the service conditions of the Tamil Nadu Government Servants is
   (A) Right to Services Act
   (B) Right to Information Act, 2005
   (C) Tamil Nadu Government Servants (Conditions of Service) Act.2016
   (D) Prevention of Corruption Act

   தமிழ்நாடு அரசு ஊழியர்களின் பணி நிபந்தனைகளை ஒழுங்குபடுத்தும் சட்டம்
   (A) சேவைகளின் உரிமைச் சட்டம்
   (B) தகவல் அறியும் உரிமைச் சட்டம், 2005
   (C) தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016
   (D) ஊழல் தடுப்புச் சட்டம்

2. Section 40(1) of the Tamil Nadu Government Servants (Conditions of Service) Act,2016 comes into effect from
   (A) 15th September 2016
   (B) 1st January 2016
   (C) 1st January 1955
   (D) 15th September 1955

   தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016ன் பிரிவு 40 (1) அமுலுக்கு வந்த நாள்
   (A) செப்டம்பர் 15, 2016
   (B) ஜனவரி 1, 2016
   (C) ஜனவரி 1, 1955
   (D) செப்டம்பர் 15, 1955

3. Appointment of member of service from one category to another category in the same service carrying identical scale of pay or grade pay is known as
   (A) Appointed by Transfer
   (B) Appointment by promotion
   (C) Appointment by Recruitment by transfer
   (D) Appointment on deputation

   "ஒரே பணியில் ஒத்த ஊதிய விகிதம் அல்லது தர ஊதியம் உள்ள ஒரு பதவியிலிருந்து மற்றொரு பதவிக்கு உறுப்பினர் பணிநியமனம்" என்பது ———————— என அழைக்கப்படுகிறது.
   (A) மாறுதல் நியமனம்
   (B) பதவியுயர்வில் நியமனம்
   (C) பணிமாறுதலில் தேர்வு நியமனம்
   (D) மாற்றுப்பணி நியமனம்

4. When a person as a member of service is on joining time be treated as
   (A) Compulsory wait
   (B) On sanctioned leave
   (C) On duty
   (D) Absent from duty

   ஒரு நபர் ஒரு பணியில் உறுப்பினராக உள்ள போது பணியேற்பிடை காலம் ———————— ஆக கருதப்படும்.
   (A) கட்டாய காத்திருப்பு
   (B) ஒப்பளிக்கப்பட்ட விடுப்பு
   (C) பணிக்காலம்
   (D) பணியில் இல்லாத காலம்

5. Promotion means

(A) Appointment from one service to another service

(B) Appointment to a higher category in the same service

(C) Appointed from one office to another office in same category

(D) Appointment from one Department to another in same category

பதவியுயர்வு என்பது

(A) ஒரு பணியிலிருந்து மற்றொரு பணியில் நியமனம்

(B) ஒரு பணியில் உயர் பதவியில் நியமனம்

(C) ஒரே பதவியில், ஒரு அலுவலகத்திலிருந்து மற்றொரு அலுவலகத்தில் நியமனம்

(D) ஒரே பதவியில் ஒரு துறையிலிருந்து வேறொரு துறையில் நியமனம்

6. Which is called as "Recruitment agency"?

(A) Tamil Nadu Public Service Commission

(B) Tamil Nadu Human Rights Commission

(C) Tamil Nadu State Planning Commission

(D) Tamil Nadu Huj Committee

"ஆட்சேர்ப்பு முகமை" என்பது எது?

(A) தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்

(B) தமிழ்நாடு மனித உரிமை ஆணையம்

(C) தமிழ்நாடு மாநிலத் திட்ட ஆணையம்

(D) தமிழ்நாடு ஹஜ் குழு

7. The list of approved candidates shall be in force for a period of

(A) 4 Years (B) 3 Years

(C) 2 Years (D) 1 Year

தேர்ந்தெடுக்கப்பட்ட நபர் / ஒப்புதல் பெற்ற தேர்வாளர்கள் பட்டியல் நடைமுறையில் இருக்கும் கால அளவு

(A) 4 வருடங்கள் (B) 3 வருடங்கள்

(C) 2 வருடங்கள் (D) 1 வருடம்

8. The time limit prescribed for joining duty for approved candidates selected by the Commission is,

(A) One month (B) Two months

(C) Three months (D) Six months

தேர்வாணையத்தால் தேர்வு செய்யப்பட்டு ஒப்புதல் பெற்ற நபர் பணியில் சேர நிர்ணயிக்கப்பட்ட கால அளவு

(A) ஒரு மாதம் (B) இரண்டு மாதங்கள்

(C) மூன்று மாதங்கள் (D) ஆறு மாதங்கள்

9. As per ———— of Tamil Nadu Government Servants (Conditions of Service) Act, 2016 any temporary post which is in existence for more than Five Years shall be treated as a permanent post.

(A) Proviso to Section 35
(B) Section 17
(C) Proviso to Section 9
(D) Proviso to Section 12

தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016ன் ————ன்படி எந்த ஒரு தற்காலிக பணியிடமும் ஐந்து ஆண்டுகளுக்கு மேலாக தொடர்ந்திருந்தால் நிரந்தரப் பணியிடமாக கருதப்படும்.

(A) பிரிவு 35ன் காப்புரை
(B) பிரிவு 17
(C) பிரிவு 9ன் காப்புரை
(D) பிரிவு 12ன் காப்புரை

10. A member of Service appointed to another service outside regular line beyond five years shall be considered for promotion if he returns to the former service and puts in a fresh service for a period of not less than

(A) Six months
(B) One year
(C) Two years
(D) Three years

ஒரு பணியின் உறுப்பினர் அவரது முறையான பதவி உயர்வில் அல்லாமல் வேறொரு பணியில் நியமனம் ஐந்து வருடங்களுக்கு மேல் ஆனால் முந்தைய பணிக்கு அவர் திரும்பி எவ்வளவு காலத்திற்கு குறையாமல் பணியாற்றினால் பதவியுயர்வுக்கு கருதப்படுவார்?

(A) ஆறு மாதங்கள்
(B) ஒரு வருடம்
(C) இரண்டு வருடங்கள்
(D) மூன்று வருடங்கள்

11. As per section 14 of the Tamil Nadu Government Servants (Conditions of Service) Act,2016, the service right in a former service is for the period of

(A) One year
(B) Two Years
(C) Three years
(D) Four years

தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016ன் பிரிவு 14ன்படி முந்தைய பணியில் பணி உரிமை உள்ள காலம்

(A) ஒரு வருடம்
(B) இரண்டு வருடங்கள்
(C) மூன்று வருடங்கள்
(D) நான்கு வருடங்கள்

12. The appointment made under section 17 of the Tamil Nadu Government Servants (Conditions of Service) Act,2016 is called as

(A) Temporary Appointment
(B) Appointment by agreement
(C) Compassionate Appointment
(D) Contract appointment

தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016ன் பிரிவு 17ன்படி மேற்கொள்ளப்படும் நியமனங்கள் ———— என்று அழைக்கப்படுகிறது

(A) தற்காலிகப் பணி நியமனம்
(B) ஒப்பந்த அடிப்படைப் பணி நியமனம்
(C) கருணை அடிப்படைப் பணி நியமனம்
(D) மாற்றுப்பணி நியமனம்

13. The minimum age limit prescribed under section 20(6)(a) of the Tamil Nadu Government Servants (Conditions of Service) Act,2016 for appointment by Direct recruitment is

(A) 15 Years (B) 18 Years

(C) 20 Years (D) 21 Years

தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016ன் பிரிவு 20(6)(a)ன்படி நேரடி நியமனத்திற்கு நிர்ணயிக்கப்பட்ட குறைந்தபட்ச வயது வரம்பு

(A) 15 ஆண்டுகள் (B) 18 ஆண்டுகள்

(C) 20 ஆண்டுகள் (D) 21 ஆண்டுகள்

14. Destitute Widows shall produce a certificate in the form specified in Schedule X of the Tamil Nadu Government Servants (Conditions of Service) Act,2016, obtained from the

(A) Tahsildar

(B) Revenue Divisional Officer

(C) Collector

(D) Registrar

தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016ன் அட்டவணை Xல் குறிப்பிடப்பட்டுள்ள படிவத்தில் ஆதரவற்ற விதவைகள் ———————— இடமிருந்து பெறப்பட்ட சான்றிதழ் சமர்ப்பிக்க வேண்டும்

(A) வட்டாட்சியர்

(B) கோட்டாட்சியர்

(C) ஆட்சியர்

(D) பதிவாளர்

15. The application for revision of the list should be submitted to

(A) Government (B) Appointing authority

(C) Appellate authority (D) Head of the Department

பட்டியல் திருத்தத்திற்கான மனுவை ———————— இடம் சமர்ப்பிக்க வேண்டும்.

(A) அரசு (B) நியமன அதிகாரி

(C) மேல்முறையீட்டு அதிகாரி (D) துறைத் தலைவர்

16. Where the appointing authority is not the Government, all postings and transfers shall be made by

(A) The Government

(B) The appointing authority or higher authority

(C) Head of the Office

(D) The Disciplinary authority

அரசு நியமன அதிகாரியாக இல்லாதவிடத்து, அனைத்து அமர்த்தாணை மற்றும் மாறுதல்கள் வழங்குவது

(A) அரசு (B) நியமன அதிகாரி அல்லது உயர் அதிகாரி

(C) அலுவலகத் தலைவர் (D) ஒழுங்கு நடவடிக்கை அதிகாரி

17. The period specified for giving notice for resignation

(A) Not less than two months (B) Not less than 60 days

(C) Not less than three months (D) Not less than 90 days

பணி துறப்பு கடிதம் அளிப்பதற்கு நிர்ணயிக்கப்பட்ட கால அளவு

(A) இரண்டு மாதங்களுக்குக் குறையாமல் (B) 60 நாட்களுக்குக் குறையாமல்

(C) மூன்று மாதங்களுக்குக் குறையாமல் (D) 90 நாட்களுக்குக் குறையாமல்

18. If there is no vacancy to accommodate a person who is confirmed or approved probationer, reverted from deputation, then

(A) The junior most in the category shall be reverted

(B) The senior most shall be reverted

(C) Deputed person shall be reverted

(D) Any one shall be reverted

மாற்றுப் பணியிலிருந்து திரும்பிய ஒரு தகுதிகாண் பருவம் முடித்த அல்லது பணி உறுதி செய்யப்பட்ட நபருக்கு இடமளிக்க காலியிடம் இல்லையென்றால்,

(A) அப்பதவியில் மிக இளையவர் பதவி இறக்கம் செய்யப்பட வேண்டும்

(B) பணியில் மூத்தவரை பதவி இறக்கம் செய்ய வேண்டும்

(C) மாற்றுப் பணிக்கு சென்ற நபரை பதவி இறக்கம் செய்ய வேண்டும்

(D) யாராவது ஒருவரை பதவியிறக்கம் செய்ய வேண்டும்

19. Vacancy caused due to dismissal of person shall be filled up only after ———— or till finalisation of appeal whichever is later.

(A) 6 months (B) One year

(C) Two years (D) Three years

ஒரு நபரை பணி நீக்கம் செய்யப்பட்டதால் ஏற்பட் காலியிடத்தை ———— காலத்திற்கு அல்லது அவரது மேல்முறையீடு முடிவு செய்த பின் இதில் எது பின்னரோ அதற்குப் பிறகு நிரப்பலாம்.

(A) ஆறு மாத (B) ஒரு வருட

(C) இரண்டு வருட (D) மூன்று வருட

20. If rights and privileges are relinquished temporarily, it shall be accepted if it is for a period of not less than

(A) Three months (B) One year

(C) Three years (D) Two years

தற்காலிக உரிமைத் துறப்பு செய்தல் எவ்வளவு காலத்திற்கு குறையாமல் இருந்தால் அதனை ஏற்றுக் கொள்ளலாம்?

(A) மூன்று மாதங்கள் (B) ஒரு வருடம்

(C) மூன்று வருடங்கள் (D) இரண்டு வருடங்கள்

21. As per section 58 of the Tamil Nadu Government Servants (Conditions of Service) Act, 2016, the power to deal with the case of any person serving under the Government, lies with

(A) The Government

(B) The Chief Minister

(C) Head of the Department

(D) The Governor

தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016ன் பிரிவு 58ன் படி, அரசின் கீழ் பணியாற்றும் எந்த ஒரு நபரின் நேர்வினையும் கையாளும் அதிகாரம் இருப்பது

(A) அரசிடம்

(B) முதலமைச்சரிடம்

(C) துறைத் தலைவரிடம்

(D) ஆளுநரிடம்

22. Application for alteration of date of birth shall be made within ———— from the date of entry into service.

(A) One year
(B) Two years
(C) Three years
(D) Five years

பிறந்த தேதியை மாற்றுவதற்கான மனுபணியில் சேர்ந்த நாளிலிருந்து ———— காலத்திற்குள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

(A) ஒரு வருட
(B) இரண்டு வருட
(C) மூன்று வருட
(D) ஐந்து வருட

23. Rules framed for governing temporary post is called

(A) General rules
(B) Special rules
(C) Adhoc rules
(D) Service rules

தற்காலிகப் பணியிடத்தை வழிநடத்தும் விதிகள் எவ்வாறு அழைக்கப்படுகிறது?

(A) பொது விதிகள்
(B) சிறப்பு விதிகள்
(C) தற்காலிக விதிகள்
(D) பணி விதிகள்

24. Ex-Serviceman belongs to SC Category shall be eligible for appointment to a service if he has not completed

(A) 35 years of age
(B) 40 years of age
(C) 45 years of age
(D) 53 years of age

SC பிரிவைச் சேர்ந்த முன்னாள் படைவீரர் ஒரு பணியில் நியமனம் பெற ———— பூர்த்தியாகாமல் இருந்தால், தகுதியானவர் ஆவார்.

(A) 35 வயது
(B) 40 வயது
(C) 45 வயது
(D) 53 வயது

25. If diploma is prescribed as a qualification in the Special Rules, which one of the following shall be recognised as the qualification?
(A) A diploma obtained without completion of SSLC or HSc
(B) A degree obtained without completion of SSLC or HSc
(C) A post graduate degree obtained without completion of SSLC, HSc and a degree
(D) A diploma obtained after completion of SSLC or HSc

சிறப்பு விதிகளில் பட்டயப்படிப்பு தகுதியாக கூறப்பட்டிருந்தால், கீழ்கண்டவற்றுள் எந்த ஒன்று தகுதியாக அங்கீகரிக்கப்படும்?
(A) SSLC அல்லது HSc படிக்காமல் பெற்ற பட்டயப்படிப்பு
(B) SSLC அல்லது HSc படிக்காமல் பெற்ற பட்டப்படிப்பு
(C) SSLC, HSc மற்றும் பட்டப்படிப்பு படிக்காமல் பெற்ற முதுகலைப் பட்டப்படிப்பு
(D) SSLC அல்லது HSc படித்தபின் பெற்ற பட்டயப்படிப்பு

26. Minimum percent specified for women for filling up of vacancies through direct recruitment is
(A) 10% (B) 20%
(C) 30% (D) 50%

நேரடி பணி நியமனங்களில் காலியிடங்களை நிரப்புவதற்கு பெண்களுக்கு வரையறுக்கப்பட்ட குறைந்தபட்ச சதவீதம்.
(A) 10% (B) 20%
(C) 30% (D) 50%

27. If no qualified and suitable woman belonging to Backward Class Muslim is available, then the turn so allotted shall go to
(A) Will be carried forward
(B) Any other woman belonging to Backward Class
(C) Woman belonging to any other Category
(D) Man belonging to backward Class Muslim

பிற்படுத்தப்பட்ட முஸ்லீம் வகுப்பில் தகுதியான பெண் கிடைக்கவில்லையென்றால், அதற்காக ஒதுக்கப்பட்ட வரிசை —————— செல்லும்.
(A) அடுத்த தேர்வுக்கு
(B) பிற்படுத்தப்பட்ட வகுப்பில் உள்ள வேறு ஏதேனும் பெண்களுக்கு
(C) ஏதோ ஒரு வகுப்பைச் சேர்ந்த பெண்களுக்கு
(D) பிற்படுத்தப்பட்ட முஸ்லீம் ஆணிற்கு

28. Under Section 27 (c) of the Tamil Nadu Government Servants (Conditions of Service) Act, 2016, 5% of reservation is specified for Ex-Servicemen for Group
(A) A (B) B
(C) C (D) D

தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016ன் பிரிவு 27(c)ன்கீழ், முன்னாள் படைவீரர்களுக்காக 5% இட ஒதுககீடு எந்த தொகுதிக்கு வரையறுக்கப்பட்டுள்ளது?
(A) A (B) B
(C) C (D) D

29. Order for declaration of Probation is to be issued within ———— from the date on which the probationer is eligible for such declaration.

(A) 15 days (B) One month

(C) Six months (D) One year

தகுதி காண் பருவம் முடித்ததற்கான விளம்பல் ஆணையை, அத்தகுதி காண் பருவத்தினர் அவ்விளம்பலுக்கான தகுதியை பெற்ற நாளிலிருந்து ————க்குள் வெளியிட வேண்டும்.

(A) 15 நாட்கள் (B) ஒரு மாதம்

(C) ஆறு மாதங்கள் (D) ஒரு வருடம்

30. The maximum period upto which the probation shall be extended is

(A) 1 year (B) 2 years

(C) 3 years (D) 5 years

தகுதிகாண் பருவ காலத்தினை அதிகபட்சமாக எவ்வளவு காலம் நீட்டிக்கலாம்?

(A) 1 ஆண்டு (B) 2 ஆண்டுகள்

(C) 3 ஆண்டுகள் (D) 5 ஆண்டுகள்

31. If a period of probation is 2 years

(A) The first increment shall be sanctioned only after acquiring the required qualification

(B) The second increment shall be sanctioned only after acquiring the required qualification

(C) No increment shall be sanctioned

(D) The first and second increment shall be sanctioned only after acquiring the required qualification

தகுதிகாண் பருவ காலம் 2 ஆண்டுகள் எனில்,

(A) தேவையான தகுதியை பெற்ற பிறகே முதல் ஆண்டு ஊதிய உயர்வு வழங்கப்படலாம்

(B) தேவையான தகுதியை பெற்ற பிறகே இரண்டாவது ஆண்டு ஊதிய உயர்வு வழங்கப்படலாம்

(C) ஆண்டு ஊதிய உயர்வு எதுவும் வழங்கக்கூடாது

(D) முதல் மற்றும் இரண்டாவது ஆண்டு ஊதிய உயர்வு தேவையான தகுதியை பெற்ற பிறகே வழங்கப்பட வேண்டும்

32. Confirmation of service shall be made

(A) In the entry level post to which the person was first appointed

(B) In all the posts

(C) In the promotional posts

(D) In temporary posts

பணி உறுதியாக்கம் செய்யப்படுவது

(A) அந்த நபர் முதன் முதலில் பணிநியமனம் பெற்ற நுழைவுநிலைப் பதவியில்

(B) அனைத்துப் பதவிகளிலும்

(C) பதவியுயர்வுப் பதவிகளில்

(D) தற்காலிகப் பதவிகளில்

33. Appointment and term of the office of the Chairman and other members of a Public Service Commission provided in the article

(A) 320 (B) 321

(C) 316 (D) 318

பொதுப் பணிகளுக்கான தேர்வாணையத்தின் தலைவர் மற்றும் இதர உறுப்பினர்களின் நியமனம் மற்றும் நிபந்தனைகள் பற்றி கூறும் ஷரத்து

(A) 320 (B) 321

(C) 316 (D) 318

34. Expenses of a State Public Service Commission will be met in the

(A) Consolidated Fund of India

(B) Consolidated Fund of a State

(C) Contingencies Fund of a State

(D) International Monetary Fund

மாநில அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் செலவினங்கள் ———————— லிருந்து செய்யப்படுகின்றன.

(A) இந்திய அரசு தொகுப்பு நிதி (B) மாநில அரசு தொகுப்பு நிதி

(C) மாநில அரசின் எதிர்பாரா செலவின நிதி (D) தேர்வாணையத்தின் நிதி

35. The term of a member of a State Public Service Commission is

(A) 6 years or the age of 62 years, whichever is earlier

(B) 6 years or the age of 65 years, whichever is earlier

(C) 5 years or the age of 62 years, whichever is earlier

(D) 5 years or the age of 65 years, whichever is earlier

மாநில அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் உறுப்பினரின் பதவிக்காலம்

(A) 6 ஆண்டுகள் (அல்லது) 62 வயது இவற்றுள் முந்தியது வரை

(B) 6 ஆண்டுகள் (அல்லது) 65 வயது இவற்றுள் முந்தியது வரை

(C) 5 ஆண்டுகள் (அல்லது) 62 வயது இவற்றுள் முந்தியது வரை

(D) 5 ஆண்டுகள் (அல்லது) 65 வயது இவற்றுள் முந்தியது வரை

36. Equality of opportunity in the matters of public employment has been provided in the ————————.

(A) Fundamental Rights

(B) Fundamental Duties

(C) Directive Principles of State Policy

(D) Rule of Reservation

பொது வேலைவாய்ப்பு இனங்களில் சமத்துவ வாய்ப்பு பற்றிக் கூறுவது

(A) அடிப்படை உரிமைகள்

(B) அடிப்படை கடமைகள்

(C) அரசின் வழிகாட்டும் கோட்பாடுகள் கொள்கை

(D) இடஒதுக்கீடு விதி

37. Which article provides a Public Service Commission for the Union and a Public Service Commission for each State?

(A) Article 205
(B) Article 315
(C) Article 305
(D) Article 320

ஒன்றியத்திற்கு ஒரு தேர்வாணையம் மற்றும் ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஒரு பொதுப்பணிகளுக்கான பணியாளர் தேர்வாணையம் என வழிவகை செய்யும் ஷரத்து எது?

(A) ஷரத்து 205
(B) ஷரத்து 315
(C) ஷரத்து 305
(D) ஷரத்து 320

38. Article 16(1) of the Constitution of India deals with

(A) Right to property
(B) Right to Education
(C) Right to equal opportunity in the matters of Public employment
(D) Right to freedom

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் ஷரத்து 16(1)ல் கூறப்படுவது

(A) சொத்துரிமை
(B) கல்வி உரிமை
(C) பொதுப் பணிகளுக்கான நியமனங்களில் சமத்துவ வேலை வாய்ப்பு உரிமை
(D) சுதந்திர உரிமை

39. All regulations made under the proviso to clause (3) of Article 320 by the Governor shall be laid for not less than ———— days before Legislature of the state.

(A) 7
(B) 10
(C) 14
(D) 15

ஷரத்து 320(3) கீழான காப்புரையின் கீழ் ஆளுநரால் உருவாக்கப்படும் அனைத்து ஒழுங்குமுறைகளும் மாநிலத்தின் சட்டப்பேரவையின் முன்னர் ———— நாட்களுக்கு குறையாமல் வைக்கப்பட வேண்டும்.

(A) 7
(B) 10
(C) 14
(D) 15

40. The Power to make regulations as to conditions of service of members and staff of the Commission dealt with in

(A) Article 319
(B) Article 320
(C) Article 318
(D) Article 316

தேர்வாணையத்தின் உறுப்பினர்கள் மற்றும் பணியாளர்களின் பணி நிபந்தனைகளை ஒழுங்குபடுத்தும் அதிகாரம் பற்றி கூறுவது

(A) ஷரத்து 319
(B) ஷரத்து 320
(C) ஷரத்து 318
(D) ஷரத்து 316

41. The Tamil Nadu Public Service Commission shall not be consulted for appointment of a person temporarily for a total period not exceeding

(A) 3 months (B) 6 months

(C) 1 month (D) 1 year

———————— காலத்திற்கு மிகாமல் ஒரு நபரை தற்காலிக பணி நியமனம் செய்வதற்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தினை கலந்தாலோசிக்க தேவையில்லை

(A) 3 மாதங்கள் (B) 6 மாதங்கள்

(C) 1 மாதம் (D) 1 வருடம்

42. A Member of the commission who on the date of assuming on his duties as such was not in the Government service post under the Government of India or State or a Government aided institution, may be granted maximum of Extraordinary leave without allowances for a period of,

(A) 1 month (B) 6 months

(C) 2 months (D) 3 months

தேர்வாணையத்தின் ஒரு உறுப்பினர்,தனது கடமைகளை ஏற்றுக்கொண்ட நாளில் இந்திய அல்லது மாநில அரசு அல்லது அரசு நிறுவனங்களில் பணியில் இல்லாத நிலையில், சம்பளமில்லா அசாதாரண விடுப்பு அதிகபட்சமாக வழங்கப்படும் கால அளவு

(A) 1 மாதம் (B) 6 மாதங்கள்

(C) 2 மாதங்கள் (D) 3 மாதங்கள்

43. A Member of the commission who on the date of appointment as such was not in the service of the Central or a State Government, is eligible for pension only if he has completed

(A) 3 years (B) 6 years

(C) 2 years (D) 1 year

தேர்வாணையத்தின் ஒரு உறுப்பினர், அவரது பணிநியமன நாளில் மத்திய அல்லது மாநிலப் பணிகளில் இல்லாத நிலையில் ———————— காலம் பூர்த்தி செய்திருந்தால் ஓய்வூதியம் பெற தகுதியுடையவர் ஆவார்.

(A) 3 வருடங்கள் (B) 6 வருடங்கள்

(C) 2 வருடங்கள் (D) 1 வருடம்

44. A Member of the Commission is not eligible to pension on his ————————.

(A) Removal (B) Voluntary retirement

(C) Compulsory Retirement (D) Retirement on superannuation

தேர்வாணையத்தின் உறுப்பினர் ஒருவர் ———————— செய்யப்பட்டால் ஓய்வூதியத்திற்கு தகுதி பெற மாட்டார்.

(A) பணியறவு (B) விருப்ப ஓய்வு

(C) கட்டாய ஓய்வு (D) வயது முதிர்வின் பேரில் ஓய்வு

45. The controller of Examinations must be filled by

(A) IAS Officer

(B) In the cadre of DRO

(C) Non IAS Officer

(D) By promotion from Deputy Secretary

தேர்வுக் கட்டுப்பாட்டாளர் —————ஆல் நிரப்பப்பட வேண்டும்.

(A) இ.ஆ.ப. அலுவலர்

(B) மாவட்ட வருவாய் அலுவலர் நிலையில்

(C) இ.ஆ.ப. அல்லாத அலுவலர்

(D) துணை செயலரிடமிருந்து பதவி உயர்வில்

46. Every person appointed to the post of Assistant Section Officer/Accountant in the commission shall pass the Departmental Test in ————— for promotion as Section Officer.

(A) Secretariat Office Manual

(B) Tamil Nadu Services Manual, Volume I

(C) Tamil Nadu Office Manual

(D) Tamil Nadu Services Manual, Volume II

ஆணையத்தில் உதவிப் பிரிவு அலுவலர் / கணக்கர் பதவியில் நியமிக்கப்பட்ட ஒவ்வொருவரும் பிரிவு அலுவலர் பதவியுயர்வு பெற ————— துறைத் தேர்வில் தேர்ச்சி பெற வேண்டும்.

(A) தலைமைச் செயலக அலுவலக நடைமுறை

(B) தமிழ்நாடு பணிகள் நடைமுறை தொகுதி I

(C) தமிழ்நாடு அலுவலக நடைமுறை

(D) தமிழ்நாடு பணிகள் நடைமுறை தொகுதி II

47. The Commission to be consulted if State Government propose to pass an original order imposing any of the penalties such as

(A) Reduction to lower rank in Seniority list

(B) Suspension list

(C) Censure

(D) Increment Cut with cumulative effect

மாநில அரசு ————— தண்டனை வழங்கி ஆணை வெளியிட கருதும் போது ஆணையம் கலந்தாலோசிக்கப்பட வேண்டும்.

(A) முதுநிலைப் பட்டியலில் கீழ்நிலைக்கு இறக்கம்

(B) தற்காலிகப் பணிநீக்கம்

(C) கண்டனம்

(D) ஊதிய உயர்வு திரண்ட பயனுடன் நிறுத்தி வைத்தல்

48. Consultation of commission is not necessary in a case relating to the termination of the employment of any person in accordance with the terms of his contract of employment as per,

(A) Regulation 16(1)(i)

(B) Regulation 16(1)(iii)

(C) Regulation 18(1)(c)

(D) Regulation 18(2)(c)

ஒப்பந்த நியமன கூறுகளின் அடிப்படையில் ஒருவரை பணிமுடிப்பு செய்யும் நேர்வில் ———— ன்படி ஆணையத்தை கலந்து ஆலோசிக்க வேண்டியதில்லை.

(A) ஒழுங்குமுறை 16(1)(i)

(B) ஒழுங்குமுறை 16(1)(iii)

(C) ஒழுங்குமுறை 18(1)(c)

(D) ஒழுங்குமுறை 18(2)(c)

49. An under Secretary should have completed ———— years of service for being appointed as Deputy Secretary in Commission.

(A) 1 (B) 2

(C) 3 (D) 4

தேர்வாணையத்தில் துணைச் செயலராக நியமனம் பெற ஒரு சார்புச் செயலாளர் ———— வருடங்கள் பணி நிறைவு செய்திருக்க வேண்டும்.

(A) 1 (B) 2

(C) 3 (D) 4

50. Tamil Nadu Public Service Commission Rules of Procedure come into force in the year

(A) 1994 (B) 1995

(C) 1961 (D) 1997

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய நடைமுறை விதிகள் அமுலுக்கு வந்த வருடம்

(A) 1994 (B) 1995

(C) 1961 (D) 1997

51. Who presides over the Departmental Promotion Committee?

(A) Chairman (B) Senior Member

(C) Secretary (D) Controller of Examination

துறை சார்ந்த பதவியுயர்வுக் குழுவை தலைமை தாங்குபவர் யார்?

(A) தலைவர் (B) மூத்த உறுப்பினர்

(C) செயலாளர் (D) தேர்வுக் கட்டுபாட்டாளர்

52. The Proceedings of the Commission shall not be invalidated by reason of any vacancy in the office of the

(A) Chairman or Member
(B) Secretary
(C) Controller of Examination
(D) Governor

———————— அலுவலகத்தில் ஏதேனும் காலியிடம் ஏற்பட்ட காரணத்திற்காக தேர்வாணையத்தின் செயல்முறையை மதிப்பற்றதாக்க இயலாது

(A) தலைவர் அல்லது உறுப்பினர்
(B) செயலாளர்
(C) தேர்வுக் கட்டுப்பாட்டாளர்
(D) ஆளுநர்

53. Commission shall present a report of its proceedings for the preceding Financial year by

(A) 15th January of every year
(B) 15th July of every year
(C) 15th March of every year
(D) 15th December of every year

தேர்வாணையம் தனது முந்தைய நிதி ஆண்டிற்கான செயல்முறைகளின் அறிக்கையை ————————ல் சமர்பிக்க வேண்டும்.

(A) ஒவ்வொரு ஆண்டும் சனவரி 15
(B) ஒவ்வொரு ஆண்டும் ஜூலை 15
(C) ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 15
(D) ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் 15

54. Which rule says about the authority competent to impose punishment against members of state services?

(A) Rule 9A of Tamil Nadu Civil Services (Discipline and Appeal) Rules
(B) Rule 12 of Tamil Nadu Civil Services (Discipline and Appeal) Rules
